புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

=====================================================================

# *புறநானூற்றில் அறநெறியில் வரி*

=====================================================================

***ஆய்வாளர்***
***அ. அமுல் செல்வ ராணி,***
*பதிவு எண்:(043648/Ph.D.K6/Tamil/Full Time/January 2016/ Date: 23.02.2018)*
*பாரதிதாசன் பல்கலைக்கழக அங்கீகாரம்,*
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி,*
*திருச்சிராப்பள்ளி.*

***நெறியாளர்***
***முனைவர் பெ. பகவத்கீதா,***
*ஆய்வு நெறியாளர்,*
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*அரசு கலைக்கல்லூரி, துவாக்குடி, திருச்சி.*

=====================================================================

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழ் மக்களின் வாழ்வியலை விளக்கும் நூல் புறநானூறு. இந்நூலில் இறுதி நூறுப் பாடல்களைக் கொண்டு ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது. இவற்றில் ஏழ்மை நிலையை உடைய மக்கள் அக்கால சமுதாயத்தில் வாழ்ந்துள்ளனர் என்ற சிக்கலை முன்வைத்து புலவர்களின் வறுமையும், அரசர்களின் கொடையும் , வசூலிக்கப்பட்ட வரி மூலம் எவ்வகையில் நீங்கியது என்ற கருதுகோளை மெய்ப்பிக்கும் வகையில் ஆராயப்பட்டுள்ளது. இவ்வழி புறநானூறு நூலில் வரி எவ்வாறு அறமாகிறது என்பதை விளக்குகிறது.*

***கலைச்சொற்கள்:*** *பசிக்கொடுமை, கடமை, வறுமை, அறநெறி, வரி*

**ஆய்வு அணுகுமுறை**

*'புறநானூற்றில் அறநெறியில் வரி' என்ற தலைப்பினை அறநெறி, வரி என்ற அடிப்படையில் பாடல்களை பகுப்பாய்வு செய்து கூறிய முறையில் பகுப்புமுறை திறனாய்வும், சமூகச்சிக்கலான பசிக்கொடுமை, பஞ்சம் என்ற கண்ணோட்டத்தில் சமூகவியல் விளக்கமுறைத் திறனாய்வும் ஆகிய இரு முறையில் அணுகப்பட்டுள்ளது.*

**முன்னுரை**

*பொற்காலம் எனப் புகழப்பெற்ற காலம் சங்க காலம். அக்காலத்தில் மக்களின் வாழ்வை படம்பிடித்துக் காட்டிய நூல் புறநானூறு. புறநானூற்றில் அறமே கொடை என்ற வாழ்வை மக்களும் அரசும் வாழ்ந்தனரா என்பதை மெய்ப்பிக்க இவ்வாய்வுக்கட்டுரை வழிவகுக்கிறது. மேலும், பொற்கால ஆட்சியில் வரிகள் வசூலிக்கப்பட்டு அவை எவ்வகையில் மக்களுக்குப் பயன்படுத்தப்பட்டது என்ற கோணத்தில் இவ்வாய்வுக் கட்டுரை அணுகப்படுகிறது. இவ்வாய்வுக் கட்டுரை புறநானூற்றில் கடைசி 100 பாடல்களைக் கொண்டு ஆராயப்படுகிறது.*

**அறநெறி முதற்றே அரசின் கொற்றம் :**

***"அறம் எனப்படுவது யாதென கேட்பின்***
***மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெலாம்***
***உண்டியும் உடையும் உறையுளும் அல்லது யாங்கணும்***
***கண்டது இல்" (மணிமேகலை. 25)***

*மண்ணில் வாழும் மனிதர்களுக்கு அடிப்படை தேவையான உணவு, உடை, இல்லம். ஆகியவற்றை முழுமையாக அடையும் சமுதாயமே அற சமுதாயம்.*

***"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" (திருவருட்பா. 3471)***

*இவ்வாறு மனிதர்களுக்கு மட்டுமின்றி செடி, கொடி, பறவை, விலங்குகளுக்கும் உணவு அவசியம் என்பதன் வழியாக அறம் வலியுறுத்தப்படுகிறது.*

**புறநானூற்றில் பசிக்கொடுமையும், பசியாற்றும் கொடையும்**

*பழந்தமிழர் முதல் இன்றைய தமிழர் வரை வீட்டிற்கு வந்திருக்கும் இரவலர் முதல் விருந்தினர் வரை உணவு என்று வேண்டி வருவோரை உணவளித்தலே சிறப்பு என்பதையறிவோம். இன்றைய பொருளாதாரப் பெருக்கம், விலைவாசி ஏற்றத்தின் காரணமாக பலர் பசிக்கொடுமையால் கையேந்தும் நிலை கொண்டவராக இருத்தலைக் காண்கிறோம்.*

*பசிக்கொடுமையால் மக்கள் வாடியதை புறநானூற்றுப் பாடல்கள் பல குறிப்பிட்டுள்ளன.*

***"மானம் குலம் கல்வி வன்மை அறிவுடைமை***
***தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்***
***கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்***

***பசிவந்திடப் பறந்து போம்" (நல்வழி. 26)***

பத்தும் பறந்துபோம் என்ற செய்தியினை அடியொற்றியும் வருதலை காண்போம்.

***"பசிதினத் திரங்கிய இரும்போர் ஏக்கற்கு***
***ஆர்பதம் கண்ணென மாதிரம் துழைஇ***
***வேர்உழந்து உலறி மருங்கு செத்து வழிய வந்து" (புறம். 370)***

புலவர் மட்டும் அல்லாமல் புலவரின் சுற்றத்தாரும் பசியோடு இருக்கும் நிலையை எடுத்துரைக்கும் மற்றொரு பாடல்,

***"பதிமுதல் படிதாப் பழங்கண் வாழ்க்கைக்***
***குறுநெடும் துணையொடும் கூமை வீதலின்***
***குடிமுறை பாடிஒய் என வருந்தி***
***அடல்நசை மறந்த என் குழிசி மலர்க்கும்***
***கடன் அறியாளர்....' (புறம். 393)***

இவ்வகையில் வீடுவீடாக சென்றும் பசித்துன்பம் தீர்க்க யாருமில்லை என்பதை தெளிவுப்படுத்தியுள்ளது. சங்ககாலத்தில் வறுமையுடைய மக்கள் நூற்றில் அரை சதவீதம் இருந்தனர் என்பதை கணிக்க முடிகின்றது.

இவ்வழி பசித்துன்பத்தால் மக்களால் உதவும் சூழல் இல்லாத நிலையில் திறமையுடைய புலவர்கள், பாணர்கள் மன்னனை நாடும் நிலை ஏற்படுகின்றது.

***"தின்பழம் பசீஇ .... னனோ பாண' (புறம். 321)***

இவ்வகையில் மன்னரை பழங்குடி மக்களின் வளர்ச்சியில் வந்தவர் என்றும் கூறலாம். ஏனெனில் 'மலைவாழ் பழங்குடி மக்கள் சேர்த்து வைத்துப் பதுக்கி, பஞ்ச காலங்களில் பசியின்றி வாழும் கலையைக் கற்று வைத்திருக்கவில்லை. எளியோர் உடைமைகளைப் பறித்து வைத்துக் குவித்து பலர் வாட தான் மட்டும் பசியாற உண்டு உண்ணும் தலைவனும் இல்லை" (குழந்தையேசு. சூ, ஆய்வுக்கட்டுரை, ப. 62) என்பதை குழந்தையேசு எடுத்துரைக்கிறார்.

இக்கருத்தை வலியுறுத்தும் வகையில்,

***"கல்லா இடையன் போலக் குறிப்பின்***
***இல்லது படைக்கும் வல்லன் உள்ளது" (புறம். 331) என்று***

குறிப்பினால் அறிந்து உணவு அளிக்கும் வல்லவன் என்றும்,

***"பசித்த பாணர் உண்டுகடை தல்லின்***
***ஒக்கல் ஒற்கம் சொலியத் தன்னூர்ச்***
***சிறுபுல் லாளர் முகத்து அளவ கூறி***
***வரகுடன் இரக்கும் நெடுந்தகை***
***அரசுவரின் தாங்கும் வல்லாளன்" (புறம். 327)***

தன் நிலத்தில் விளைந்த வரகினை பாணர்களுக்கு சமைத்தளித்து, தனது சுற்றத்தாருக்காகவும், தனக்காகவும் வரகினை கடனாக உடைய தலைவன் என்பதையும் எடுத்துரைக்கிறது.

நல்லாட்சி என்பது தன் நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றிலும் குறைவுபடாமல் வாழும் மக்களைக் கொண்ட ஆட்சியே ஆகும். இவ்வகை ஆட்சியில் வறுமையைப் போக்குவது கொடையே.

***“கொடை என்பது திரண்ட பசுநிரையொன்றும் தப்பாமே தம்மை வேண்டினவர்களுக்கு பிரியப்பட்டுக் கொடுத்தது” (சிங்காரவேலு முதலியார். ஆ, ப. 614)*** என்று கலைக்களஞ்சியம் சுட்டுகிறது.

***“மூதாக் கன்றுமடுத்து ஊட்டும்***
***கா.......... பரிசிலருக்கு***
***வள்ளியது சுரக்கும் லும்பா ஈகை” (புறம். 323)***

முதிர்ந்த பசு தன் கன்று இல்லாமல் பிற கன்றுகளுக்கு பாலை ஊட்டுவது போல மன்னன் தன்னை வேண்டி வந்தவர்களுக்கு விரும்பியதை அளிக்கும் ஈகை குணமுடையவன். மேலும்,

***“கடுந்தேர் அள்ளற்கு அசாவா நோன்சுவல்***
***பகடே அத்தையான் வேண்டி வந்தது என***
***ஒன்றியான் பெட்டா அளவை அன்றே***
***ஆன்று விட்டனன் அத்தை விசும்பின்***
***மீன்பூத் தன்ன வருவப் பன்னிரை***
***ஊர்த்தியொடு நல்கி யோனே...’ (புறம். 399)***

இது மட்டுமின்றி, இவை போல,

***”வெஞ்சின வேழம் நல்கினன் அஞ்சி***
***யான் அது பெயர்த்தனென் ஆகத் தானது***
***சிறிறென உணர்ந்தமை நாணிப் பிறிதும் ஓர்***
***பெருங்களிறு நல்கியோனே” (புறம். 394) என்று***

பாணரின் வறுமைக்கு மன்னன் இரு யானைகளை அளித்து அந்த யானைகளை பேணும் அளவுக்கு பரிசுகளையும் அளித்திருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

பொறிப்பூ, பொன்மாலை, பொன் அணிமணிகள், செந்நெல், உழவுமாடு, தேர் முதலியவை பரிசாக வழங்கியுள்ளதை விளக்குகிறது. தர்மத்தின் கடைசி எல்லை என்று கூறும் வகையில் சேரமான் குடக்கோவிற்கும் சோழன் பெருநற் கிள்ளிக்கும் போரில் பெரும் காயமடைந்து கிடக்கும் அத்தருணத்தில் சென்ற புலவருக்கு சேரமான் கழுத்திலணிந்த ஆரத்தை எடுத்துக் கொள்ளச் சொன்னதாக புறம் 368ஆம் பாடல் எடுத்துரைக்கிறது.

*புலவர்கள் மன்னர்களை புகழ்ந்து பாராட்டினாலும் சிலவிடங்களில் மன்னர்களின் தவறுகளை சுட்டிக்காட்டும் வகையில் அறிவுறுத்தும் வகையில் பாடல்கள் இடம்பெற்று உள்ளன.*

***"பொதுமை சுட்டிய மூவர் உலகமும்***
***பொதுமை இன்றி ஆண்டிசி னோர்க்கும்***
***மாண்ட வன்றே ஆண்டுகள் துணையே***
***வைத்த தன்றே வெறுக்கை வித்தும்***
***அறிவினை யன்றே விழுத்துனை" (புறம். 357)***

*சேர, சோழ, பாண்டியர் மூவர்க்கும் நல்லறம் பொதுமையென்று அறத்தின் நெறியை வலியுறுத்துவதில் கொடுப்பதன் மேன்மையையும் புறநானூற்றுப் பாடல்கள் வலியுறுத்துகின்றன.. இதனை ,*

***"............... இரப்போர்க்கு ஈய்ந்தும்***
***மகிழ்கம் வம்போ மறப்போ ரோயே***
***அரிக அகலும் உரிய பெரும***
***நிலம்பக வீழ்ந்த அலங்கல் பல்வேர்***
***மூதுமரப் பொத்தின் கதுமென இயம்பும்***
***கூகைக் கோழி ஆனத்***
***தாழிய பெருங்காடு எய்திய ஞான்றே" (புறம். 364)***

*தர்மத்தை (அறத்தை) செய்ய வேண்டிய காலங்களில் செய்யாமல் சுடுகாடுக்கு போய் சேரும் நேரம் வந்தால் என்று வஞ்சிக்கும் சொல் வழியாக அறிவுத்தல் அமைகிறது.*

*இப்பாடலினைப் போல் நிலையாமையைச் சுட்டி நல்லறத்தை பேணச் சொல்லும் புறம் 364, 365 பாடல்களையும் குறிப்பிடலாம்.*

**அந்தணர்களுக்கு தானமளிக்கும் முறை**

***"அந்தணர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவோர், அந்தண்மை அழகிய குளிர்ந்த அருள் பூண்ட துறவியல் அத்தண்மை பூண்ட அல்லறத்தாரான பார்ப்பாரும் அந்தணர் என்னும் பெயர்குரியர். இவ்விரு வகுப்பிற்கும் இனம், குலம், மதம், இட வரையறையில்லை' (தேவநேயப்பாவணர், மொழிஞாயிறு, ப. 225)***

*இவ்வழி அந்தணர்கள் என்று அழைக்கப்படுவோரே பார்ப்பனரும் ஆவார்.*

***"...... பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்***
***பூவும் பொன்னும் புன்னுடச் சொரிந்து" (புறம். 367)***

*அந்தணர்களுக்கு அளிக்கப்படும் தானம் இரண்டு கைகளை இணைத்து பூவும், பொன்னும் வழங்க வேண்டும் என்று சுட்டுகின்றனர். பாணர், பாடினி, புலவர் இவர்களுக்கு இல்லாத சிறப்பு அந்தணருக்கு ஏனெனில்,*

*"அறுவகைப் பட்ட பற்ப்பனப் பக்கமும்" (தொல்., நூற்பா, 74)*

என்று நூல் விளக்குவதால் இருக்கலாம். இவ்வழி பண்டைய சமுதாயம் அந்தணர்களுக்கு அளித்த சிறப்பை இன்று வரை தொடர்ச்சியாக நமது சமுதாயம் பின்பற்றுகிறது எனலாம்.

**புறநானூற்றில் வரி**

வரி என்பது இன்றைய கால வழக்குச் சொல்லாகும். சங்க இலக்கியத்தில் இறை, புரவு என்றும், கல்வெட்டுக்களில் இறை, புரவு, கடமை, ஆயம் என்ற சொற்களிலும் இடம்பெறுகிறது. ஒரு மன்னன் தன் நாட்டை திறம்பட ஆட்சி செய்ய மக்களால் வழங்கபட்ட நிதியே வரி ஆகும். பண்டைய புறநானூறு காலத்தில் மன்னன் தன் நாட்டை பாதுகாக்கவும், அயல்நாட்டினருடன் போர் புரியவும் தேவைப்படும் நிதியை வரியாக மக்களிடம் வசூலித்தனர்.

***"அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே கோடி யாத்து நாடு பெரிதும் நந்தும் , மெல்லியன் கிழவனாகி வரிசையறியா கல்லென் சுற்றமொடு பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின் , தானும் உண்ணான் உலகமும் கெடுமே " (புறம். 184)***

மக்களின் நிலை அறிந்து வரியினை பெற வேண்டும் என்று பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அறிவுறுத்தப்படுகிறது. மற்றொரு பாடலில்,

***"குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்***
***சிறியோன் பெறின் அது சிறந்தன்று மன்னே" (புறம். 75)***

அதிகமாக வரி பெறுவதால் சிறந்த மன்னராக விளங்க முடியாது என்று சோழன் நலங்கிள்ளிக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இவ்விரு பாடல்களின் வழி 'வரி' வசூலித்தமை அறியப்படுகிறது. ஆய்வுக்கட்டுரையின் எல்லையான கடைசி நூறு பாடல்களில் 'வரி' குறித்து சொற்றொடர் நேரடியாக இடம்பெறவில்லை.

மன்னருக்கு அதிகமான புதுவருவாய் தரும் ஊர் என்று குறிப்பால் 'வரி' இடம்பெற்றிருப்பதை அறியலாம். நல்லூர், நன்னாடு போன்ற சொற்களின் வழி விளைச்சலில் வரும் பங்கு (வரியை) அறியமுடிகிறது.

***"இருங்கழி இழிதரும் ஆர்கலி வங்கம்***
***தேறுநீர்ப் பரப்பின் ஆறுசீத்து உய்த்துத்***
***துறைதொறும் பிணிக்கும் நல்லூர்" (புறம். 400)***

கடல் வாணிபம் மேற்கொண்டதால் புதுவருவாய் உடைய ஊர் என்று வாணிபம் வழி வருவாய் (வரி) பெற்றதை உணர்த்துகிறது.

வரிக்கு உரிய நிலங்களை தானமாக (வரியில்லா) அளிப்பது இறையிலி (வரியிலி) நிலம்.

***"புரவிற்கு ஆற்றா சீறூர்" (புறம். 330)***

கொடைகளாக மன்னர் நிலங்களை அளிப்பது மன்னரின் வழக்கம். இப்பாடலின் அடியில் குறைந்த வருமானமே கொண்டதால் இறையிலியாக அளிக்க முடியாத சீறூர் என்று குறிப்பு இடம்பெறுகிறது. தொழில் நுட்ப வளர்ச்சி இல்லாத காலங்களிலும் வரியின் தேவை அறிந்து மன்னர்கள் வரி பெற்றுள்ளனர் என்பதை துல்லியமாக அறிய முடிகிறது. வரி பெறுவது மன்னன் தன் சுற்றமுடன் செழித்து வாழ்வதற்கு அல்ல. பெற்ற வரியினை , திரையினை மக்கள் நலனிற்கு அவர்களின் பசி தீரவும் அறநெறியில் பயன்படுத்தியிருப்பதை அறிய முடிவதே ஆய்வு நோக்கமாக அமைகின்றது.

**முடிவுரை**

**'புறநானூற்றில் அறநெறியில் வரி'** என்ற தலைப்பில் அறநெறியை வலியுறுத்தும் கருத்துக்கள் மட்டுமன்றி பொற்காலம் என்ற சங்க காலத்திலும் பசிக்கொடுமையை எடுத்துக் கூறும் புலவர்களும், மக்களும் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துரைக்கிறது. மன்னர் பசியாற்றுதலிலும், கொடை வழங்களிலும் சிறப்பாக செயல்பட்டுள்ளதை கொடை , தானம் , இறை எனப் பல்வேறு நிலைகளில் விளக்கப்படுகிறது. ஆனால் மன்னரைத் தேடி செல்லா மக்கள் வறுமையுடனே வாழ்வு கழித்திருப்பார்களா என்பது கேள்விக்குரியது. வரியை குறித்த புறநானூறு பாடல்களிலே வரியைக் குறித்த இருபாடல்கள் மட்டுமே தெளிவான கருத்தை எடுத்துரைக்கும் நிலையில் சங்க காலத்தில் மன்னருக்கு அறத்தை வலியுறுத்தல் வழி வரி குறித்த கருத்தும் அறியப்படுகிறது. இவ்வாய்வுக் கட்டுரை வழி சங்க காலம் பொற்காலம் என்பது ஆட்சி செய்யும் மன்னரின் முறைமையில் இருப்பதை பசி நாடி வந்தோருக்கு அவர்கள் வறுமை நீங்க கொடுத்தமையை அதற்கு வரியினைப் பயன்படுத்திக் கொண்டதையும் அறிய முடிகின்றது.

**மேற்கோள்கள்**


1. சிங்கார முதலியார். ஆ., கௌமாரீஸ்வரி எஸ். (பதிப்பாசிரியர்), அபிதான சிந்தாமணி தமிழ்க்களஞ்சியம், சீதை பதிப்பகம், முதற்பதிப்பு-2004,
2. துரைசாமிப்பிள்ளை.ஔ.சு., திருவருட்பா, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1989
3. தேவநேயப் பாவாணர், மொழி ஞாயிறு, ஞா., தமிழர் வரலாறு, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை, 2018-2019
4. மரிய சூசை, முனைவர் அ. (தொகுப்பாசிரியர்), இந்தியப் பழங்குடிப் பண்பாடும் தமிழ்ப் பண்பாடும் - ஒர் ஒப்பீட்டுப் பார்வை, போதிவனம் வெளியீடு, சென்னை, 2011
5. மாணிக்கவாசகன். ஞா. (உரை), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், முதற்பதிப்பு 1998
6. வேங்கடசாமி நாட்டார், நாவலர் மு. (உரை), நல்வழி, பத்மம் பதிப்பகம், 2010
7. வேங்கடசாமி நாட்டார், நா.மு.(உரை), துரைசாமிப்பிள்ளை ஔ.சு. (உரை), சாரதா பதிப்பகம், 2007